# ‘திராவிட மாடல்’ கல்வி – ஒரு பார்வை!

## ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரை

**லண்டன், அக். 15 - இங்கிலாந்தில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் ஆக்ஸ்ஃபோர்டு யூனியன் மன்றத்தில் கடந்த 13-10-2025 அன்று, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ‘திராவிட மாடல் கல்வி ஒரு பார்வை’ என்ற தலைப்பில் ஆற்றிய உரை வருமாறு:-**

மாண்புமிக்க ஆக்ஸ்ஃபோர்டு யூனியன் உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய பேராசிரியர்கள், மற்றும் மாணவர்களுக்கு வணக்கம். உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்ஃபோர்டு யூனியன் மன்றத்தில் இன்று உரையாற்றுவது எனக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது. இங்கு தமிழ்நாட்டின் பிரதிநிதியாக மட்டுமல்ல, சமூக நீதி, சமத்துவம், மற்றும் ‘எல்லார்க்கும் எல்லாம்’ எனும் கொள்கையுடன் அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் கல்வி முறை மீது உறுதியான நம்பிக்கைகொண்ட பிரதிநிதியாகவும் இங்கு வந்துள்ளேன்.

எங்களைப் பொறுத்தவரை, வகுப்பறை என்பது கற்றல் நடைபெறும் இடம் மட்டுமே அல்ல; அது சமூக நீதியின் புகலிடமாகவும், மாற்றங்களுக்கான உந்துசக்தியாகவும் இருக்க வேண்டும். ஒரு விவசாயி, ஒரு மீனவர், மாநில ஆளுநர் என எல்லோரின் குழந்தைகளும் ஒரே இடத்தில் சமத்துவமான கல்வியைப் பெற வேண்டும். அந்தக் குழந்தைகள் ஒரே உணவைப் பகிர்ந்துகொள்வதோடு, தங்களின் கனவுகளை அடைவதற்கான வாய்ப்புகளைப் பெற வேண்டும். அதற்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதே எங்கள் திராவிட மாடல் பார்வை.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

அப்படி ஒரு திட்டம் உருவான சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டம் சர்வதேச அளவில் பாராட்டுகளைப் பெற்ற ஒன்று. அது ஓர் அரசு அதிகாரியின் அலுவலகக் கோப்புகளில் இருந்து பிறக்கவில்லை. எங்களுடைய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, காலை உணவு அருந்தாமல் பசித்த வயிறுடன் சில குழந்தைகள் வகுப்பறையில் அமர்ந்திருப்பதைக் கண்டார்.

அவர்களுடைய பசியின் பின்னால் இருந்த ஆழமான உண்மையை அவர் புரிந்துகொண்டார். கூடவே, ‘ஒரு குழந்தையின் வயிறு காலியாக இருந்தால், அவர்களின் மனமும் காலியாக இருக்கும்” என்று அவர் சிந்தித்த அந்த நொடியில் அவர் இதயத்தில் இருந்து உருவானதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.



பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட பிறகு, அதனால் ஏற்பட்ட மாற்றங்கள் பல ஆச்சரியமான விளைவுகளைச் சுட்டிக்காட்டின.

மாணவர்களின் வருகைப் பதிவு அதிகரித்தது. கற்றல் செயல்பாடுகளில் உற்சாகமாக மாணவர்கள் பங்கேற்றார்கள். மிக முக்கியமாக ஊட்டச்சத்துக் குறைபாடு தொடர்புடைய காரணங்களுக்காக ஊரகப் பகுதிகளில் 68% மற்றும் நகர்ப்புறங்களில் 80% எனும் அளவில் உடல் நலக் குறைவால் குழந்தைகள் மருத்துவமனைக்குச் செல்லும் அளவு அபரிமிதமாகக் குறைந்திருக்கிறது. தொடக்கக் கல்வியில் கற்றல் இடைநிற்றல் சதவிகிதம் பூஜ்ஜியம் ஆக்கியிருக்கிறோம்.

அதனால்தான் எப்போதும் சொல்கிறோம். கல்வி விலை உயர்ந்தது என்று நினைப்பவர்கள் முதலில் பசியைப் போக்க முயற்சி செய்யுங்கள். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போதே சிறப்பான மாற்றங்களுக்கான முதல் படியை நாம் கடக்கிறோம்.

### அரசுப் பள்ளிகள் பெருமையின் அடையாளம்!

திராவிட மாடல் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில் மட்டுமல்ல, உயர்வான சாதனைகளை நோக்கி மாணவர்களை உந்தித் தள்ளும் முயற்சிகளுக்கும் பெரும் முக்கியத்துவம் கொடுக்கிறது. எங்களுடைய அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், அரசு மாதிரிப் பள்ளிகளில் படித்த மாணவர்கள், ஐஐடி, ஐஐஎம் போன்ற இந்தியாவின் முதன்மைக் கல்வி நிறுவன ங்களிலும் சர்வதேச அளவில் உயர்நிலைக் கல்வி நிறுவனங்களிலும் சேர்க்கை பெற, அவர்களை நாங்கள் தயார் செய்கிறோம். அதற்கான திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்துகிறோம்.

இதற்கு முன், அரசுப் பள்ளி மாணவர்களில் ஒரு சிலர் மட்டுமே இந்த உயர்நிலை நிறுவனங்களில் சேர்க்கை பெற்று வந்தனர். கடந்த நான்கு ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை பன்மடங்கு உயர்ந்து வருகிறது. மாணவர்கள் அனைத்து வகையான திறமைகளையும் பெறுவதற்கு நாங்கள் வழிகாட்டுகிறோம். இதுதான் எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படைக் கோட்பாடு.



கல்வியோடு, கலை, கலாசாரம், மற்றும் விளையாட்டு என அனைத்துத் தளங்களிலும் எங்கள் மாணவர்களை நாங்கள் ஆதரிக்கிறோம். பொருளாதாரத் தடைகள் அவர்களின் கல்வியைப் பறிப்பதை நாங்கள் ஒரு போதும் அனுமதிப்பதில்லை. அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம். எங்கள் அரசுப் பள்ளிகள் வறுமையின் அடையாளமாக அல்ல, பெருமையின் அடையாளமாக விளங்குகின்றன.

### முற்போக்குத் திட்டங்களால் ஏற்படும் தலைமுறை மாற்றங்கள்!

தமிழ்நாட்டின் வகுப்பறைகளில் சமத்துவம், சமூக நீதியை உறுதி செய்யும் நான் முதல்வன், தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண் உள்ளிட்ட திட்டங்களால் இளைஞர் திறன் மேம்பாடு பெறுவதும் உயர் கல்வி பெறுவதும் உறுதி செய்யப்படுகிறது.

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்த மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர மாதந்தோறும் ரூ.1,000 நிதியுதவி வழங்குகிறோம். அதேபோல, உயர் கல்வி பயிலும் பெண்களுக்கும் மாதாந்திர உதவித் தொகை ரூ.1,000 வழங்குகிறோம்.

### குழந்தையின் இதயத்தைத் தொடுபவர்கள் ஆசிரியர்கள்!

இந்த முற்போக்கான திட்டங்கள் இடைநிற்றலைத் தடுப்பதுடன் பெண்களின் கல்லூரிச் சேர்க்கையை 34% ஆகவும் ஒட்டுமொத்த உயர் கல்விச் சேர்க்கை 50%க்கு மேலாகவும் அதிகரித்து மாபெரும் தலைமுறை மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

நவீன உலகை நோக்கிய எங்களின் கல்விப் பயணத்தில் தொழில்நுட்ப மாற்றங்களையும் அதி விரைவாகத் தழுவுகிறோம். தொடக்கக் கல்வி பயிலும் 44.50 லட்சம் மாணவர்கள் பயன்பெற 22,931 ஸ்மார்ட் போர்டு வகுப்பறைகளை உருவாக்கியிருக்கிறோம். பள்ளிப் பாடத் திட்டங்களில் AI, ரோபாட்டிக்ஸ், கோடிங் உள்ளிட்ட நவீனத் தொழில்நுட்பச் சாத்தியங்களை எங்கள் பள்ளி வளாகங்களுக்குள் கொண்டு வந்திருக்கிறோம்.




இங்கு முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே. அது ஓர் ஆசிரியருக்கான சிறந்த மாற்று ஆக இருக்க முடியாது. எந்தவொரு குழந்தையின் இயல்பான அறிவையும் உணர்ச்சிகளையும் முழுமையாகப் புரிந்துகொள்ள ஆசிரியரால் மட்டுமே முடியும். ஆசிரியர்களால் மட்டுமே ஒரு குழந்தையின் இதயத்தைத் தொட முடியும் என்பதை நாங்கள் உளப்பூர்வமாக நம்புகிறோம்.

### எங்களை இயக்கும் கதைகள்!

தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் உள்ள பள்ளி ஒன்றில், பாடம் எடுத்து வரும் ஆசிரியர் ஒருவரைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் உள்ள பள்ளி சார்ந்த 77 பொருண்மைகளில் நான் ஆய்வுக்குச் சென்றபோது அந்த ஆசிரியரைச் சந்தித்தேன். அப்போது அவர் கண்ணீர்ப் பெருக்கோடு என்னை வரவேற்றார்

நாட்டின் சுதந்திரத்திற்குப் பிறகு முதன்முதலாக ஒரு கல்வி அமைச்சராக நான் அவரது பள்ளிக்கு வருகை தந்ததைக் குறிப்பிட்டு, தன் மகிழ்ச்சியை அவர் கண்ணீருடன் வெளிப்படுத்தினார். அதே பள்ளியில் ஒரு பழங்குடி மாணவரைச் சந்தித்தேன். அவரோடு உரையாடும்போது, நான் எங்கள் தலைமுறையில் முதல் மாணவனாக கல்வி கற்க வந்திருக்கிறேன். ஒருபோதும் நான் கடைசி மாணவனாக இருக்க மாட்டேன் என நெஞ்சுறுதியோடு கூறினார்.

இவைதான் எங்களை இயக்கும் கதைகள். எங்களுடைய அரசியல் பாரம்பரியம் என்பது அதிகாரத்திற்கானது மட்டுமல்ல. அது எளிய மனிதர்களுக்கும் கல்வி, சுதந்திரம், சமத்துவம், சமூக நீதி, பகுத்தறிவு எனும் ஜனநாயகம் கொண்டது. ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்று உரைக்கும் திராவிட மாடல் பாரம்பரியம் எங்களுடையது.

### மனிதகுலத்தை விடுவிக்கும் செயல்!

உலகின் தலைசிறந்த மனிதர்கள் உரையாற்றிய இந்த ஆக்ஸ்ஃபோர்டு யூனியன் அரங்கில் அமர்ந்திருக்கும் அறிவார்ந்த சபையினர் முன்பு நான் அறிவிக்கும் செய்தி இதுதான். ‘கல்வியைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள். ஒருபோதும் அதை விட்டுவிடாதீர்கள். கல்வி ஒரு முதலீடு. அது ஒரு குழந்தையைப் படிக்கவைக்கும் செயல் மட்டுமல்ல... எல்லா தளைகளில் இருந்தும் மனிதகுலத்தை விடுவிக்கும் செயலாகும்!’

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றினார்.

---

## உயர்கல்வித் தரத்தினை மேலும் உயர்த்திடவும்

# திறன் மிகுந்த மாணவர்களை உருவாக்குவது குறித்தும் ஆய்வுக் கூட்டம்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக்.15-

உயர்கல்வித் தரத்தினை மேலும் உயர்த்திடவும், உயர்கல்வியை மாணாக்கர்களுக்கு கொண்டு சேர்ப்பதை உறுதி செய்வதுடன், திறன்மிகுந்த மாணாக்கர்களை உருவாக்குவது குறித்து நேற்று (14.10.2025) உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அண்ணா, சென்னை, பாரதியார், பாரதிதாசன், மதுரை காமராசர், மனோன் மணியம், அழகப்பா, அண்ணாமலை, பெரியார், அன்னை தெரசா, திரு வள்ளுவர், திறந்தநிலை பல்கலைக்கழகம் மற்றும் ஆசிரியர் பல்கலைக்கழகம் ஆகிய 13 அரசு பல்கலைக்கழகங்களைச் சார்ந்த பதிவாளர்கள், தேர்வுகட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழக உள்தர உறுதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர்களுடனான (IQAC Coordinators), ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்கலைக்கழகங்களின் கீழ் நடத்தப்படும் பாடப்பிரிவுகளின் செயல்பாடுகள் மற்றும் அது சிறப்பான முறையில் செயல்படுகிறதா என்பது குறித்தும், மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்புகள் சிறந்த முறையில் கிடைக்கப்பெறுகிறதா என்பது குறித்தும் உயர்கல்வி நிறுவனங்களில் பாடத்திட்டங்கள் மற்றும் கேள்வித்தாள்களின் தரம் குறித்தும் அமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், உயர்கல்வி மாணவர்களின் கற்றல் மேம்பாடு, மாநில மற்றும் தேசிய அளவிலான தொழில்நுட்ப போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணாக்கர்களின் பங்கேற்பு குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்பட்டு வரும் பாடப்பிரிவுகளின் கிரெடிட் (credits) கட்டமைப்பு பற்றியும், பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி சூழல் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திரக் கற்றல் போன்ற வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல், மாணவர்களின் மொழியாற்றலை மேம்படுத்துதல், கல்லூரி மாணாக்கர்களின் வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும் வகையிலான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், மாணாக்கர்கள் தாங்கள் பெற்ற கல்வி அறிவினை வெளிபடுத்த ஏதுவாக ஆங்கில மொழியாற்றலை வளர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், பாடப்பொருள் சார்ந்த செயல்பாடுகள் குறித்த இத்தகைய ஆய்வுகளையும் மேற்கொள்வதன் மூலம் மாநிலத்தில் உயர்கல்வியின் தரம் உயர்வதோடு மாணாக்கர்களின் திறன் மேம்பாடும், வேலை வாய்ப்பு சூழலும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி அளவில் முழுமையான செயல்படுத்தப்படுவதை தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தோடு இணைந்து கண்காணித்து உறுதி செய்யும் என்றும், தமிழ்நாட்டில் உயர்கல்வியின் தரத்தினை வலுப்படுத்தும் பொருட்டு இனிவரும் காலங்களில் இத்தகைய பாடப்பொருள் சார்ந்த ஆய்வுகள், பல்கலைக்கழக அளவிலும், கல்லூரிகள் அளவிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித்துறை அரசு செயலர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத் துணைத் தலைவர் முனைவர் எம்.பி. விஜயகுமார், கல்லூரிக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில் நுட்பக் கல்வி இயக்கக ஆணை யர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, தமிழ்நாடு உயர்கல்வி மன்ற உறுப்பினர் செயலர் முனைவர் டி. வேல்முருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தருமபுரி வைர விழா பூங்காவினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், தருமபுரி நகர மன்ற தலைவர் திருமதி.லட்சுமி நாட்டான் மாது, மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்ரமணி மற்றும் திமுகவினர், அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (14.10.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில், மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, அன்னியூர் சிவா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு.சிவராசு மற்றும் அலுவல், அலுவல்சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.